முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1604

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.02.2024**, திங்கட்கிழமை

1. அறம் வளர்க்கும் ஞான வள்ளலே
   ஆறுமுகன் என் வழிபாட்டின் நெறிமுறையை
   வரமாக மக்களுக்கு தருகின்ற
   வள்ளலே ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   சோபகிருது வருடம் மாசி மாதம் 07 ம் நாள், 19.02.2024, திங்கட்கிழமை)
   வரமென அரங்கன் வழி உலகோர்
   வணங்கி வந்தால் போதும் இந்த வையகத்தில் மாற்றம்
3. மாற்றமதும் ஞானபண்டிதன் என்னருளாக
   ஞானிகளாகவே உருவாகும் மக்களுக்கு அரிய வாய்ப்பு
   வாய்ப்பு தனை அரங்கன் வழி ஆறுமுகன் யான்
   வரமாகத் தந்து அருள்புரிகின்றேன்
4. ஆகவே உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி வந்து
   அரங்கன் தரும் உபதேச வழிகளை
   ஞானமாக வேதமாக ஏற்று
   நம்பிக்கை வைத்து தானதர்மங்கள் செய்துகொண்டு
5. செய்துகொண்டு தர்மநெறி கடைபிடிக்க
   ஜெகமெல்லாம் ஞானியர்கள் படை
   அரங்கன் தயவாலே பெருகக்கூடும்
   ஆற்றல்பட அரங்கனுக்கு இந்த மகாசக்தி அனுதினம்
6. ஆறுமுகன் யான் வரமாகத் தந்து காத்து வருகின்றேன்
   வையகத்தில் வழி மொழிந்து
   வந்தால் உலகோர்க்கு மாற்றம்
   நம்பகமுற ஞானிகளாகும் வண்ணம்

7. வண்ணமுடன் நிலைகள் உயர்ந்து
வருங்காலத்தையே மாற்றும்
மகா சக்தியும் யோகமும்
வரமாகக் கிட்ட நேரும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–